2018 மார்ச் 20]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறுகின்றபோது, சாலைகள் போடுகின்றபோது மரங்கள் அகற்றப்பட்டதால் ** இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதை மாற்றி, சாலைகளில் மரங்கள் எடுத்த இடங்களில் மறுபடியும் மரங்கள் நடப்படும் என்று திருத்தி, ** என்ற வார்த்தையை நீக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வாறே மாற்றப்படுகிறது. வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1394—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, முசரவாக்கம், திருப்புட்குழி மற்றும் கீழ்அம்பி ஆகிய ஊராட்சிகளில் பாலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள முசரவாக்கம், திருப்புட்குழி மற்றும் கீழ்அம்பி ஆகிய ஊராட்சிகளிலுள்ள 28 குடியிருப்புகளுக்கும் தனி மின்விசைத் திட்டங்கள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இந்த ஊராட்சிகளில் பாலாறு குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: திராவிட இனத்தினுடைய நான்காம் தலைமுறை தலைவர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி எழுப்பிய காலக்கட்டத்தில், என் தொகுதிக்குட்பட்ட முசரவாக்கம், திருப்புட்குழி மற்றும் கீழ்அம்பி ஆகிய 3 கிராமங்களை மட்டும் குறிப்பிட்டு நான் அப்பொழுது கேள்வியாக மனு செய்திருந்தேன். தாமல், முசரவாக்கம், திருப்புட்குழி, கீழ்அம்பி அதையொட்டியுள்ள பெரும்பாக்கம், கிளார், முத்தவேடு மற்றும் ஒட்டிவாக்கம் ஆகிய 8 கிராமங்களில் வசிக்கக்கூடிய 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்குத் தொடர்ந்து ஏற்படுகின்ற வறட்சியின் காரணமாக குடிநீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆழ்துளைக் கிணறு அமைக்கக்கூடிய பணி செய்தும்கூட, அங்கே போதிய குடிநீர் வழங்குவதற்கான வாய்ப்பில்லாத நிலை உள்ளது. விசைப் பம்புகள்மூலம் அங்கே குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது போதுமானதாக இல்லாததனால் மீண்டும் என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருப்புட்குழி ஊராட்சியில் 11 ஊரகக் குடியிருப்புகளும், முசரவாக்கம் ஊராட்சியில் 10 ஊரகக் குடியிருப்புகளும் மற்றும் கீழ்அம்பி ஊராட்சியில் 7 ஊரகக் குடியிருப்புகளும் உள்ளன. இவ்வூராட்சிகளில் தற்போது தனி மின்விசைத் திட்டங்கள்மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு

2018 மார்ச் 20]

சராசரியாக 65 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஊராட்சிகளில் போதுமான அளவுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், பாலாறு குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இதுபோக, கிட்டத்தட்ட 5 ஊராட்சிகளையும் சேர்த்து உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். துறை அதிகாரிகள்மூலம் அதை ஆய்வு செய்து, அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைத் தெரிந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை வேலூர் பகுதியிலிருந்து இங்கே வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். அந்தத் திட்டத்தின் மூலமாகச் செயல்படுத்தத் தேவை இல்லையென்று சொன்னாலும், காஞ்சிபுரம் மற்றும் அதையொட்டியுள்ள பகுதிகளில் மக்கள் தொகை பெருகி வருகின்றது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சற்றொப்ப 3 இலட்சம் மக்கள் தொகைக் கொண்டதாக இருக்கிறது. விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், குடிநீர்ப் பிரச்சினையும் உள்ளது என்பதனால்தான் இதனை நான் வலியுறுத்திச் சொல்ல வேண்டிய நிலையுள்ளது.*

காஞ்சிபுரம் என்று சொன்னாலே அதிகமான கோயில்கள் உள்ள நகரமாக, பட்டுப் புடவைக்குப் பிரசித்திபெற்ற நகரமாக இருக்கிறது. சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து இங்கு வரக்கூடிய மக்கள் தொகை, அங்கே வசிக்கக்கூடிய மக்களுடைய எண்ணிக்கை என்று கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது, குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ள ஒரு நகரமாக, தொகுதியாக இருக்கிறது. எனவே, திருவண்ணாமலையிலிருந்து 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டு, வேலூர் பகுதிக்கு அரசின் திட்டம் இப்போது இருப்பதாக அறியப்படுகிறது. அந்தத் திட்டம் சற்றொப்ப 15 கிலோ மீட்டர் தொலைவில் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள மாங்காடு கூட்ரோடு பகுதியிலிருந்து செல்வதனால், அந்தத் திட்டத்திலிருந்து ஓர் இணைப்பாக காஞ்சிபுரத்திற்கும் இணைத்து வழங்கப்படுமேயானால், சற்றொப்ப 20 ஆண்டுக் காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல்

தீர்க்கப்படும் என்ற கருத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன். இது மிகவும் அவசியமானது என்பதால் அவசியத்தைக் கருத்திற்கொண்டு நிச்சயம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக வலியுறுத்தி அமைகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்திய திட்டங்கள்மூலம் ஊரகப் பகுதிகளிலே 99.11 விழுக்காடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் குழாய்மூலம் வழங்கப்படுகிறது. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கிராமங்களைப் பொறுத்தவரை தமிழகத்தில் 12,524 ஊரட்சிகளும், 79,424 குக்கிராமங்களும் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 44,888 குக்கிராமங்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதமும், 24,193 குக்கிராமங்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 முதல் 55 லிட்டர் வீதமும், 10,343 குக்கிராமங்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசரவாக்கம், திருப்புட்குழி மற்றும் கீழ்அம்பி ஆகிய ஊராட்சிகளில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 5,575 மக்கள் தொகையும், 9 குக்கிராமங்களை உள்ளடக்கிய முசரவாக்கம் ஊராட்சியில் மொத்தம் 10 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும், 27 சிறு மின்விசைப் பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. இவ்வூராட்சியில் 18 விசைப் பம்புகளும், 20 கை பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. இக்குடிநீர் ஆதாரங்கள்மூலம் நபர் ஒருவருக்கு தினசரி 67 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 6,923 மக்கள் தொகையையும், 7 குக்கிராமங்களையும் உள்ளடக்கிய திருப்புட்குழி ஊராட்சியில் மொத்தம் 13 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும், 12 சிறு மின் விசைப் பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. இவ்வூராட்சியில் 16 விசைப் பம்புகளும், 6 கை பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன.*

2018 மார்ச் 20]

இக்குடிநீர் ஆதாரங்கள்மூலம் நபர் ஒருவருக்கு தினசரி 61 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. 5,050 மக்கள் தொகையும், 7 குக்கிராமங்களையும் உள்ளடக்கிய கீழ்அம்பி ஊராட்சியில் மொத்தம் 20 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும், 18 சிறு மின் விசை பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. அதேபோல 17 விசை பம்புகளும், 14 கை பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. இந்த ஊராட்சியிலும் தினசரி நபர் ஒருவருக்கு 74 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருவண்ணாமலை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் கேட்டிருக்கிறார். அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலை மற்றும் மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி வருகின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பூர் வடக்கு சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட 10 ஊராட்சிகளில் வட்டபாளையம், சொக்கனூர், மேற்குப்பகுதி, துறவலூர், வள்ளிபுரம், காளிபாளையம், கணக்கம்பாளையம் மற்றும் கொங்குபாளையம் ஊராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இல்லை. திருப்பூர் வடக்கு சட்டப் பேரவைத் தொகுதியில் 29 வார்டுகள் மற்றும் 10 ஊராட்சிகள் உள்ளன. அந்த 29 வார்டுகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உள்ளது. ஆனால், 10 ஊராட்சிகளுக்கு இந்தத் திட்டம் இல்லை. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மக்கள் நலன் கருதி அவினாசி–அன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து, அந்தப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 மார்ச் 20

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, 5 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 21,000 கோடி ரூபாய்க்குமேல் நிதியொதுக்கப்பட்டு பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மீண்டும் 2016 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் உத்தரவிட்டு, கிட்டத்தட்ட 5,356 கோடி ரூபாய்க்கு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றனர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தொகுதிக்காக, விதி 110–ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திட்டம் அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு என்னுடைய நன்றி.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அதேபோல இன்றைக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திருப்பூர் மாவட்டத்தையொட்டித்தான் குடிநீர்த் திட்டம் கேட்டிருக்கிறார். திருப்பூர் மாவட்டத்திற்கும், ஈரோடு மாவட்டத்திற்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சில திட்டப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. சில பணிகள் அரசாணை அளவில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ஊராட்சிகள் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இயக்கத்தின் செயல் தலைவர் அவர்களை வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுமார் ரூபாய் 640 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, பழனி சட்டமன்றத் தொகுதி, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, நத்தம் சட்டமன்றத் தொகுதி, நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி ஆகிய தொகுதிகளில் வேலைகள்

2018 மார்ச் 20]

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எப்போது வேலைகள் முடிவுற்று காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மக்களின் பயன்பாட்டிற்கு வரும்? மேலும், மழை இல்லாத காரணத்தால், திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பணிகளை விரைவில் முடித்து காவேரி கூட்டுக் குடிநீர் வழங்க ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது, விதி 110–ன்கீழ் ரூபாய் 636 கோடியில் அறிவித்தார்கள். நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் அற்புதமான திட்டம். அந்தத் திட்டத்தில் உள்ள கிராமங்களில் இன்றைக்கு 70 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன.* L&T *நிறுவனம் அந்தப் பணிகளைச் செய்து வருகிறது. ஆகவே, அந்தத் திட்டத்தில் திண்டுக்கல் மாநகருக்கு ரூ.70 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டு அதுவும் முடிவுறும் தருவாயில் உள்ளது. ஆகவே, இந்தத் திட்டங்களெல்லாம் வரும்போது திண்டுக்கல் மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை இல்லாத அளவிற்கு முழுமையாகக் குடிநீர்ப் பிரச்சினைத் தீர்க்கப்படும். மேலும், நத்தம் தொகுதியிலுள்ள கிராமங்களும் முழுமையாக அந்தத் திட்டத்தினால் பயன்பெறும். முன்னாள் அமைச்சர் திரு. நத்தம் விசுவநாதன் அவர்களும் அப்போது கோரிக்கை வைத்தார். தற்போது, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் அந்தத் திட்டத்திற்கு மட்டுமல்ல, இன்னும் சில கிராமங்கள் பெயரைச் சொல்லி அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே அந்தக் கிராமங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுள்ளார். இந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். எனவே, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவாக முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

54—

புதிய தொழிற்சாலைகள்

***9807—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது டிட்கோ மற்றும் சிப்காட் வசம் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில்முனைவோர்கள் திருநெல்வேலி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால், டிட்கோ அவர்களுடன் இணைந்து, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நெல்லை தொகுதிக்குட்பட்ட மானூர் ஒன்றியப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கு விவசாயம்தான் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த ஐந்து, ஆறு ஆண்டுக் காலமாக, மழை அதிகம் பெய்யாத காரணத்தாலும், சிற்றாருக்குக் குறுக்கே அணைகள் கட்டப்பட்டதாலும், குளத்திற்கு தண்ணீர் வருவது